# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஆகஸ்ட் 18, 2018 Weekly E-paper ● August 18, 2018


# போராளித் தலைவனுக்குப் புகழ் வணக்கம்!

எண்பதாண்டு காலம் தமிழ் மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் ஓயாமல் உழைத்த, சமூக நீதி, பகுத்தறிவுக் கொள்கைகளுக்காகப் போராடிய மாபெரும் தலைவர், மாமனிதர், கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், 18.082018 சனிக்கிழமை காலை சரியாக 10.00 மணிக்கு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தப்படும். பேரவைத் தோழர்கள் அனைவரும், கறுப்பு உடையுடன், உரிய நேரத்தில் வந்திட வேண்டுகின்றேன்.

**- சுப.வீரபாண்டியன்,**
**பொதுச் செயலாளர்**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**



● சுப.வீரபாண்டியன்

## திராவிடக் கொடியை உயர்த்திப் பிடிப்போம்!

திராவிடச் சூரியன் கலைஞர் மறைவுக்குப் பின்னாவது, திராவிடக் கொள்கைகளையும், திராவிட இயக்கத்தையும் வீழ்த்திவிட வேண்டும் என்று மதவாதப் பிற்போக்குச் சக்திகள் துடியாய்த் துடிக்கின்றன. அந்த நோக்கத்தை நிறைவேற்ற, வேறு திசையிலிருந்து வேறு சில சக்திகளும் முயற்சி செய்கின்றன.

அடுத்து ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு தி.மு.கழகத்திற்கே உள்ளது என்பதைப் புரிந்துகொண்ட தீய சக்திகள், அதனைத் தடுக்கத் தங்களால் ஆன அனைத்து வேலைகளையும் செய்து வருகின்றன. கட்சியை உடைக்க முடியுமா, கட்சியின் மீது சேறு பூச முடியுமா என்று சிந்தித்துப் பல்வேறு விதமான சதித் திட்டங்களை வகுத்து வருகின்றனர்.

இந்த எண்ணத்தை நேரடியாக வெளிப்படுத்தத் துணிவில்லாமல், இரண்டு கழகங்களும் வேண்டாம் என்று ஒரு முழக்கம் முன்வைக்கப்படுகிறது. இரண்டும் எப்படித் திராவிட இயக்கப் பிரிவுகள் ஆகும்? திமுக மட்டுமே திராவிட இயக்க அரசியல் கட்சி என்பதை மறைக்க, அதிமுகவை நம்முடன் கொண்டுவந்து சேர்க்கின்றனர்.



தமிழ்த்தேசியம் என்னும் பெயரில், திராவிட இயக்கத்தைக் கொச்சைப்படுத்துவதையே தங்கள் தொழிலாகக் கொண்டு சிலர் இயங்குகின்றனர். இன்னும் அரசியலுக்கே வராத நடிகர் ஆட்சிக்கு வந்தாலும் குற்றமில்லை, திமுக வந்துவிடக்கூடாது என்று ஒருவர் மல்லுக்கட்டுகிறார். நாங்கள் மட்டுமே தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கட்சி, பொய்களையே தங்கள் மூலதனமாக்கி, திமுகவின் மேல் அவதூறு செய்து வருகிறது.

தடைகளைத் தகர்த்து எறிந்து, அடுத்த ஆளும்கட்சியாய்த் திமுகவை ஆக்கினால் மட்டுமே நாடு பிழைக்கும். அதற்கான ஆக்கப் பணிகளை இன்றே தொடங்குவோம். கலைஞரின் கனவை நினைவாக்குவோம்! என்றும் இந்த மண்ணில் திராவிடக் கொடியை உயர்த்திப் பிடிப்போம்! ●

# “தமிழக அரசு கொள்கை முடிவை எடுக்க வேண்டும்”

நேர்காணல்:
மா.உதயகுமார்

ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் தொடர்பாக “பூவுலகின் நண்பர்கள்” அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் சுந்தர்ராஜன் அவர்களிடம் கருஞ்சட்டைத் தமிழர் இதழுக்காக எடுக்கப்பட்ட நேர்காணல்.

**? அண்மையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஸ்டெர்லைட் ஆலையின் அலுவலகம் செயல்படுவதற்கு அனுமதி வழங்கியதை எதிர்த்துத் தமிழக அரசு மேல்முறையீடு செய்திருக்கிறது. அதே போல் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையும் தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டு வழக்கை சி.பி.ஐ க்கு மாற்றி உத்தரவிட்டிருக்கிறது. இச்செயல்பாடுகள் மூலம் தமிழ்நாடு அரசும் நீதிமன்றமும் மக்கள் நலனுக்கு ஆதரவான போக்கைக் கடைபிடிப்பதாகப் பார்க்கலாமா?**

நீதிமன்றத்தையும் தமிழக அரசையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தேசத் துரோக வழக்குகளை நீக்கியது, முதல் குற்றப் பத்திரிக்கைகளை (FIR) நீக்கியது என மிகச் சரியான பார்வையோடு இவ்வழக்குகளை விசாரித்து உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால் தமிழக அரசை அப்படிப் பார்க்க முடியாது. ‘தாமிர உருக்காலைகளுக்குத் தமிழ்நாட்டில் அனுமதி கிடையாது’ என்கிற கொள்கை முடிவை அரசு எடுக்காமல், வெறும் அரசாணை (G.O.) பிறப்பித்திருக்கிறது. இவ்வரசாணையைச் சட்டப்படி எளிதில் வென்றுவிடுவார்கள்.

ஆனால் கொள்கை முடிவினில் உச்ச நீதிமன்றமோ, மத்திய அரசோ தலையிடமுடியாது. தொழிற்கொள்கை முடிவு முழுக்க மாநில அரசின் உரிமையாகும். மத்திய அரசிடம் உறுதியாக நின்று மாநில உரிமைகளுக்காகப் போராடும் அரசாக இருக்க வேண்டும். இன்றைக்கு இருக்கும் அரசு அப்படியில்லை.

எனவே தமிழக அரசு கொள்கை முடிவை எடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது.

**? இது போன்ற போராட்டங்களால் வேலை வாய்ப்பு குறைகிறது, அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது, தொழில் வளர்ச்சி குன்றுகிறது என்பது போன்ற ஊடகக் கருத்துகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஊடகங்களுக்கான அழுத்தத்தை அவர்கள் கொடுக்கிறார்கள். ஊடகங்களில் பணியாற்றக் கூடிய முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு இருக்கும் எல்லைகளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். என்னதான் ஸ்டெர்லைட் போன்ற நிறுவனங்கள் தங்களுக்கு ஆதரவான செய்திகளைப் போட வைத்தாலும், மக்கள் வாங்கிப் படிப்பதில் தான் அவ்வூடகத்திற்குப் பெருமை இருக்கிறது. எனவே ஊடகங்கள் மக்களுக்கான குரலாக ஒலிக்க வேண்டும். *1 கோடி வாசகர்கள், 50 இலட்சம் வாசகர்கள்* என்று விளம்பரப்படுத்திக் கொண்டுதானே மற்ற விளம்பரங்களை ஊடகங்கள் பெறுகின்றன. அப்படி இருக்க, அதற்குக் காரணமான மக்கள்தான் முதன்மையானவர்களாக இருக்க வேண்டும். மக்கள் நலன் சார்ந்த செய்திகளையே ஊடகங்கள் வெளியிட வேண்டும்.



**சுந்தர்ராஜன்**
பூவுலகின் நண்பர்கள்

**? கிராம சபைகள் கூடித் தீர்மானம் நிறைவேற்றினால், ஸ்டெர்லைட் போன்ற ஆலைகள் செயல்பாட்டைத் தடுக்கமுடியும் என்கிற கருத்து பற்றி...**

கிராம சபைகள் கூடித் தீர்மானம் நிறைவேற்ற முழு உரிமையும் அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. அப்படி கிராம சபைகள் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் அது குறியீட்டளவில் முதன்மையான விசயமாக இருக்கும். அது மிகவும் முக்கியமான ஆயுதமாகவும் இருக்கும். ஆனால் நடைமுறையில் எந்த அளவிற்கு அது நீதிமன்றத்தில் முக்கியமானதாகக் கருதப்படும் என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ‘நியாம்கிரி’ பிரச்சினையில் 14 கிராமசபைகள் கூடித் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது. ஆனால் அதே முக்கியத்துவத்தை மீத்தேன் திட்டத்திற்கோ, ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்திற்கோ கொடுப்பார்களா என்றால் அது சந்தேகம்தான்.

ஆனாலும் தீர்மானம் நிறைவேற்றுவது என்பது ஒரு நல்ல முயற்சியே ஆகும். அது ஒரு முக்கியமான முன்நகர்வு.

**? ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்தில் இந்தியா முழுக்க இருக்கும் வெவ்வேறு சுற்றுச் சூழல் அமைப்புகளின் நிலைப்பாடு பற்றி...**

ஸ்டெர்லைட் விவகாரத்தைப் பொறுத்த வரையில், துப்பாக்கிச் சூடு நடந்த பின்பு இந்தியா முழுதும் அதற்கு எதிரான போராட்டங்களைச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் நடத்தின. டெல்லி முதலான இடங்களில் இயங்கும் அமைப்புகள் நமக்குத் தோழமையாக இருக்கின்றன. பல நேரங்களில் அவர்கள் நமக்காகக் குரல் கொடுக்கின்றனர்.

**? மீத்தேன், ஹைட்ரோகார்பன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் எனத் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, அரசு எட்டுவழிச் சாலைத் திட்டத்தை அறிவிக்கிறது. இதனால் மற்ற போராட்டங்கள் நீர்த்துப் போகிறதா?**

அரசிற்கு எதைப் பற்றியும் கவலையில்லை. தன்னை இயக்குபவர்களுக்குத், தன்னைக் கட்டிக் காப்பாற்றுபவர்களுக்கு என்ன தேவையோ அதை மட்டும்தான் செய்யும். மீத்தேன், ஹைட்ரோகார்பன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் எனத் தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டாலும் அவர்களால் எட்டு வழிச் சாலைத் திட்டத்தை அறிவிக்க முடிகிறதென்றால் அவர்கள் யாருடைய நலனுக்காக இயங்குகிறார்கள் என்பது விளங்கும்.

இப்படி மாற்றி மாற்றி மக்கள் விரோதத் திட்டங்களை அறிவித்து நம்முடைய கவனத்தைச் சிதறடிப்பதே அரசின் பணியாக இருக்கிறது. ஆனால் இன்று மக்களுக்குப் பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அரசு எதிர்ப்பை எதிர்கொள்கிறது.

நாங்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், தமிழ்நாட்டின் மையக்கருதுகோளாகச் சூழலியல் பிரச்சினை மாறவேண்டும் என்பதே. அதற்கான பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். ●

# டாஸ்மாக் வீதியும் நெடுநல்வாடையும்

**வெற்றிச்செல்வன்**

அளவுக்கு அதிகமாக மதுவருந்தியதால் தன்னிலை அறியாது தள்ளாடும் குடிமகன்களை, டாஸ்மாக் அமைந்துள்ள தமிழ்நாட்டு வீதிகளில் அன்றாடம் பார்க்கிறோம். இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கவிதையில் காட்சிப்படுத்தியுள்ளார், நெடுநல்வாடை தந்த நக்கீரர்.

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் இத்தகைய காட்சி ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து**
**துவலைத் தண்துளி பேணார் பகல்இறந்து**
**இருகோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர...**

என்று போகிறது பாடல்.

ஆறு போல அகலமான மதுரை நகரத்துத் தெருக்களில் மக்கள் சுற்றித் திரிகிறார்களாம். எவ்வாறு? லேசாக மழைச்சாரல் விழுந்து கொண்டிருக்கிறது. பகல் பொழுது கழிந்து விட்டது. எனினும், கள்ளை அதிகமாகக் குடித்ததால், மழைத்துளி தன்மேல் விழுவதையும் பொருட்படுத்தாது, பகல் பொழுது கழிந்த பின்னரும் தாம் விரும்பிய இடங்களிலெல்லாம் சுற்றித் திரிகிறார்களாம், மதுரை நகரத்து மக்கள்.

டாஸ்மாக்கில் குடித்துவிட்டு குடிமகன்கள் செய்யும் அழிச்சாட்டியங்கள், அவ்வப்போது சமூகவலைதளங்களில் வெளியாகிக் காண்பவர்களை நகைக்க வைக்கின்றன. குடிமகன்கள் செய்யும் அக்கப் போர்களால் பெண்கள் சாலையில் நடக்க முடியாத சூழல் உள்ளதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. விபத்துகள் நடப்பது வாடிக்கையாகி விட்டது.

உண்ணற்க கள்ளை என்று கூறும் வள்ளுவர், கள்ளுண்போர் சான்றோரின் நல்லெண்ணத்தைப் பெற மாட்டார்கள் என்கிறார் (குறள் 922). உடல் நலத்துக்குத் தீங்கான மதுபானங்களைத் தடை செய்வது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அரசை வழிகாட்டும் நெறிமுறைகளில் ஒன்றாக உள்ளது (அங்கம் 47). ஆனால் இன்று அரசே மதுக்கடைகளை நடத்தும் அவலம் நிகழ்கிறது.



தமக்குக் கேடு தருவதோடு நில்லாது, பிறருக்கும் கேட்டினை விளைவிக்கும் மதுவை மறப்போம். மானுடம் காப்போம்.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீதிபதிகளுக்கும் அவமதிப்பு!

நீட் தேர்வு எழுத வேண்டுமானால் ராஜஸ்தானுக்கும், கேரளாவுக்கும், கர்நாடகாவுக்கும் மக்கள் ஓட வேண்டும்.

ஸ்டெர்லைட் ஆலை தேவையில்லை என்று மக்கள் போராடினால் 13 உயிர்களைப் பலி கொடுக்க வேண்டும்.

பசுமை வழிச்சாலை அமைக்கிறார்கள் என்றால் மக்கள் வாடி வதங்க வேண்டும்.

இவைகள் குறித்துக் கேட்டால் அல்லது பேசினால் கைது, சிறை, குண்டர் சட்டம். இது அரசதிகாரம்.

இப்படிப்பட்ட அரசதிகாரம் மாண்பமை நீதிபதிகளையும் விட்டு விடவில்லை என்பதை அண்மை நிகழ்வு ஒன்று உணர்த்தியுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதி அரசர் இந்திரா பேனர்ஜி உச்சநீதிமன்ற நீதிபதியாகச் செல்வதால், மும்பை உயர்நீதிமன்ற நீதி அரசர் விஜயாகலேஸ் தாஹில் ராணி சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதி அரசராகப் பொறுப்பேற்கச் சென்னை வந்தார்.

பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. ஆளுநரும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இங்கே உயர்நீதிமன்ற நீதிபதி பதவியேற்பு என்பதனால், இந்நிகழ்வுக்கு வரும் நீதிபதிகளை முன்வரிசையில் அமரவைத்திருக்க வேண்டும்.

ஆனால், நடந்ததோ வேறு!

முன்வரிசையில் அமைச்சர்கள். அவர்களுக்குப் பின் வரிசையில் ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள்.

அவர்களுக்கும் பின்னால் மூன்றாம் நிலையில்தான் நீதிபதிகளுக்கு இருக்கைகள் போடப்பட்டிருந்தன.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு முன்வரிசை. நாளை, அவர்களுக்குத் தண்டனை தரப்போகிற நீதிபதிகள் மூன்றாம் வரிசையிலா? பிரச்சனை எழுந்தது.

மனம் வெதும்பிய நீதிபதிகள் தங்களின் வேதனையை வெளிப்படுத்தினார்கள். ஆனால் ஆளுநர் மாளிகை அதைக் கண்டுகொள்ளாமல் அலட்சியம் செய்தது.

இந்நிலையில் சுதந்திர நாளையொட்டி ஆளுநர் மாளிகை ஒரு தேநீர் விருந்து அளித்தது.

அந்தத் தேநீர் விருந்தை நீதிபதிகள் பலரும் புறக்கணித்துவிட்டார்கள். இருக்கைகள் காலியாகவே கிடந்தன.

குப்பைகளைக் கூட்டுவதும், மாநில உரிமைகளில் தலையிடுவதும்தான் மோடி அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலையே ஒழிய, நாட்டு மக்களையும், மாநில நீதிபதிகளையும் மதிக்கத் தெரியவில்லை அவர்களுக்கு.

ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை என்றார் அறிஞர் அண்ணா.

இனியும் மாநில அரசுகளுக்கு ஆளுநர் தேவையா?

மக்கள் சிந்திக்க வேண்டிய நேரமிது...

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நூல் விற்பனைப் பிரிவுப் பொறுப்பாளர் தோழர் கார்த்திக் - கிருத்திகா இணையரின் பெண் குழந்தையின் பெயர் சூட்டுவிழா திருச்சி ஸ்ருதி அரங்கத்தில் நடைபெற்றது. குழந்தைக்குப் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், பொன்னெழில் என்று பெயர் சூட்டி வாழ்த்தினார்.



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# பேரவையின் செயற்குழுத் தீர்மானங்கள்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயற்குழுக் கூட்டம், 12.08.2018 அன்று மாலை 3 மணி முதல் 6 மணி வரையில், திருச்சி, அருண் ஹோட்டல், சிற்றரங்கில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர்கள் 32 பேரும், சிகாகோவிலிருந்து வந்திருந்த வீரசேகரன் உள்ளிட்ட 8 சிறப்பு விருந்தினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்குமுன், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலர் வணக்கம் செய்யப்பட்டது. பிறகு கூட்டத்திற்குத் தலைமை வகித்த, பேரவையின் அவைத் துணைத் தலைவர் சாவல்பூண்டி சுந்தரேசன் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து, தோழர்கள் மா.உமாபதி, சிங்கராயர், சிற்பி செல்வராஜ், எட்வின், சுப.வீரபாண்டியன் ஆகியோர் உரையாற்றினர்.

**கீழ்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.**

1. இன்றைய தமிழக அரசியல் களத்தில், தி.மு.கழகத்தினை வீழ்த்திட வேண்டும் என்ற நோக்கில், பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்கின்ற பா.ஜ.க.வை அம்பலப்படுத்தி, அவர்களுக்குத் துணைபோகும் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளை வீழ்த்தி, அடுத்துவரும் தேர்தலில், தி.மு.க.வை ஆட்சிக்கட்டிலில் அமர்த்திட, நாடெங்கும் பரப்புரைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.




> **இந்த ஆண்டு முதல், துப்புரவுத் தொழிலாளர் அல்லது அருந்ததியர் பிள்ளைகளை ஆண்டுக்கு ஐந்து பேர் என்று தேர்ந்தெடுத்து, அவர்களுக்கான நிதியுதவி உள்ளிட்ட கல்வி வசதி வாய்ப்புகளைத் திராவிடத் தமிழர் அறக்கட்டளை மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவர்களின் மேற்படிப்பு வரையில் நிதியுதவியைத் தொடர்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.**

2. மேலை நாடுகளிலும், இந்தியாவில் உள்ள கேரளத்திலும் கூட, பாதாளச் சாக்கடைகளைத் துப்புரவு செய்வதற்குக் கருவிகள் வந்துவிட்டன. ஆனால் தமிழ்நாட்டிலோ, இன்னும் மனிதர்களே சாக்கடைக்குள் இறங்கும் அவலநிலை உள்ளது. அதே போல கையால் மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்களை நாடெங்கும் பார்க்க முடிகிறது. இந்த இழிவுகள் துடைக்கப்பட வேண்டும், இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணிகள் தரப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி, மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.
3. இலெனின் சிலையமைப்புக் குழு இம்மாத இறுதிக்குள், தங்கள் திட்டத்தைத் தலைமைக்கு அறிவிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.
4. மகளிர் அணிச் செயலாளர் மகாலட்சுமியும், புதுவை மாநிலப் பொறுப்பாளர் திராவிட மங்கையும் இணைந்து, தமிழகம் முழுவதும் பேரவையின் மகளிர் அணியைக் கட்டமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.
5. புலவர் ஜெயபால் சண்முகம், புலவர் செல்லக்கலைவாணன் ஆகியோர் பேரவையின் இலக்கிய அணியையும், தோழர் நெல்லை சந்தானம் இளைஞர் அணியையும் மறுசீரமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
6. இன்னும் உறுப்பினர் படிவங்களை நிரப்பி அனுப்பாத மாவட்டச் செயலாளர்கள், வரும் 31 ஆம் தேதிக்குள் அப்பணியை முடிக்க வேண்டும் என்றும், செப்.17 முதல் அனைவருக்கும் உறுப்பினர் அட்டை வழங்கும் பணி தொடங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ●

---

## வருந்துகிறோம்

**இ**ந்திய முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் 16.08.2018 அன்று காலமானார். இளம் வயதில் தன்னை ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் இணைத்துக் கொண்டவர் இவர். அவ்வியக்கம் தடை செய்யப்பட்ட போது உருவான ஜனசங் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர், அக்கட்சியின் அடுத்த கட்டமான பாரதிய ஜனதா கட்சியில் பெரும் பங்காற்றினார். தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் இரண்டு பேர்களை மட்டுமே கொண்ட இக்கட்சி, பின்னர் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த போது அக்கட்சியின் பிரதமர் ஆனார். மென்மையாக அனைவரிடமும் நட்பாகப் பழகும் இவரின் மறைவுக்கு நம் ஆழ்ந்த இரங்கல்.





**ச**ட்ட அறிஞரும், நாடாளுமன்ற உறுப்பினரும், மக்களவை முன்னாள் தலைவருமான சோம்நாத் சாட்டர்ஜி 13.08.2018ஆம் நாள் மறைந்தார். 1968ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். தன் வாழ்நாள் எல்லாம் கட்சியில் கொள்கைப் பிடிப்புடனும், பிற கட்சியினருடன் இனிய முகத்துடனும் பழகுபவரான இவரின் மறைவுக்கு வருந்துகிறோம்.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.